R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
March 2022



நமது மாதஇதழின் ஆசிரியரின் குடும்பத்தோடு
சகோதரர் பெர்னான்டஸ் குடும்பத்தினர்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God
love people
be a servant



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 மார்ச் 2022 கனி 4




MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 27
தலைப்பு : ஜெயங்கொள்ளுகிறவன் - Overcomer
வேத வாசிப்பு : ரோமர் 8:35-39

1. நாம் நம்மில் அன்புகூருகிறவராலே - ரோ.8:37
2. வாலிபரே,பொல்லாங்கனை நீங்கள் - 1யோவா.2:13,14
3. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் - வெளி.21:7

குடும்பமாக
கர்த்தருடைய
பணியைச் செய்ய
ஒப்புக்கொடுக்கப்பட்ட
கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்
தேவை
63793 50509



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்





E.RAJA MURUGAN, Evangelist
CHURCH OF CHRIST
38, Mariyamman Koil Street
Elapakkam -603 201, Anaikundram
CHENGALPATTU DT
Cell: 80566 19266


## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer`s Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher`s Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor`s Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd
Signature of Publisher.

Date:28.02.2022


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 259

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அந்நியன்மேல் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறவர் எவர்?
2. நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், எவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்?
3. கர்த்தரே தேவன் என்பதற்கு அந்தப் பீடம் நமக்குள்ளே சாட்சியாயிருக்கும் என்று சொல்லி, ஏத் என்று பேரிட்டவர்கள் யார்?
4. முற்காலத்திலே நாமும் புத்தியீனமும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் அடிமைப்பட்டவர்களும்... என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. முப்பது குமாரத்திகளையும், முப்பது குமாரர்களையும் புறத்திலே விவாகம் பண்ணிக்கொடுத்த பெத்லகேமியன் யார்?
6. அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவஞ்செய்தவர்களையல்லவா? அவர்கள் சவங்கள் எங்கே விழுந்துபோயிற்று?
7. உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றவன் யார்?
8. பரத்திலிருந்துவருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், ... மாயமற்றதாயுமிருக்கிறது என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. யார், யாரைப் பார்த்து: கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்?
10. அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் என்ன செய்யப்பட்டிருக்கிறீர்கள்?

## வேதாகம ஆய்வு... 44

ஏவாள் - Eve



1. ஏவாள் என்றால் ஜீவன்
2. ஜீவனுள்ளோருக்குத் தாய் – ஆதி.3:20
3. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் – ஆதி.3:20
4. இவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலு – 1தீமோ.2:14
5. இவளே விலக்கப்பட்ட கனியை – ஆதி.3:6

சிறுவர் பகுதி



## காயீனும் ஆபேலும் - Cain and Abel

ஹலோ! தம்பி, தங்காய், இந்த காயீனும் ஆபேலும் யார் என்று தெரியுமா? இவர்கள் இருவரும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த பிள்ளைகள் காயீன் மூத்தவன், ஆபேல் காயீனுடைய தம்பி. காயீன் நிலத்தைப் பயிரிட்டு விவசாயியாக வேலைபார்த்தான். ஆபேலோ ஒரு மேய்ப்பன். ஒரு நாள் இந்த அண்ணன் தம்பி இருவரும் கர்த்தருக்குக் காணிக்கை கொண்டு சென்றனர். அப்போது கர்த்தர் காயீனுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் ஆபேலுடைய காணிக்கையை மட்டும் ஏற்றுக்கொண்டார். காயீனுக்கு வந்ததே கோபம்! அவன் எரிச்சலடைந்து அவனுடைய முகநாடியெல்லாம் வேறுபட்டது கர்த்தரிடத்தில் கோபித்துக்கொள்ளலாமா? கர்த்தர் எவ்வளவு பெரியவர்! எவ்வளவு வல்லவர்! நம்மெல்லாரையும் அவர் தானே படைத்திருக்கிறார்.

சரி, காயீனுடைய காணிக்கையைக் கர்த்தர் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை தெரியுமா? இவன் சாதாரணமாக தன் நிலத்தில் விளைந்த கனிகளைக் காணிக்கையாகக் கொண்டுசென்றான். சிறப்பான கனிகளைக் கொண்டு சென்றதாகத் தெரியவில்லை. ஆனால் இவன் தம்பி ஆபேலோ முதல் பிறந்த குட்டிகளையும் நல்ல கொழுமையானவற்றையும் கர்த்தருக்கென்று சிறப்பானதாகக் கொண்டு சென்றான். காரணம் என்ன தெரியுமா? ஆபேலுக்குக் கர்த்தர்மேல் அவ்வளவு பிரியம்! அவ்வளவு விசுவாசம். கர்த்தருக்கு இவனுடைய காணிக்கை பிடித்திருந்தது. அதனால் தான் கர்த்தரே இவனைக் குறித்து நற்சாட்சி சொன்னார். "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான், அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்..." (எபி.11:4) என்றுசொல்லப்படுகிறது.

ஆம், அன்பு தம்பி, தங்காய், நீங்களும் கூட உங்க Miss க்கு, அல்லது உங்க Friends க்கு ஒரு gift கொடுக்கணுமனா, மிக அழகான, விலையுயர்ந்த, சிறப்பான பொருளைத்தானே கொடுப்பீங்க? உங்களுக்கு அவர்களை ரொம்ப பிடிக்கும் அப்படித்தானே! உங்களைபோலத் தான் ஆபேலுக்கும் கர்த்தர் மேல் ரொம்ப அன்பும் விசுவாசமுமிருந்தது. நாம் எப்போதுமே நம்வாழ்க்கையில் கர்த்தருக்குத்தான் முதலிடம் கொடுக்கணும். அப்போது தான் கர்த்தர் நம்மைக் குறித்து நற்சாட்சி சொல்லுவார். நம்மை அதிகம் அதிகமாக ஆசீர்வதிப்பார்! O.K வா? Bye, Bye...

**மனப்பாடவசனம்**

**"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் "... - நீதி.8:17**

## நடப்புச் செய்திகள்


- **வேலை இன்மை காரணமாக 2020ல் 3548 பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள்**
- **ஒவ்வொரு வருடத்திலும் இச்சம்பவம் கூடிக்கொண்டே செல்கிறது**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 22 மார்ச் - 2022 கனி - 4


**ஆசிரியருரை**

## இயேசுவுக்கு சீஷனாயிருக்க தகுதியற்றவர்கள் யார்?
## Who Is Not Eligible To Be as Disciples to Jesus?



**எ**ல்லாவற்றிற்கும் ஒரு தகுதி அவசியமாக இருக்கிறது. தகுதியில்லாதவர்கள் நலமான காரியங்களை பெற்றுக்கொள்ள இயலாது. இயேசுவின் சீஷர்களாவதற்கு சில தகுதியாம்சங்கள் இருக்கவேண்டும் என இயேசுவானவர் போதித்தார். அது என்னவென்றால்; "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:26). ஒட்டுமொத்தத்தில் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரையும் வெறுக்கச்சொல்லுகிறாரே என்ற தயக்கம் எல்லோருக்கும் ஏற்படும். இது இயல்பான ஒன்றுதான். ஆண்டவர் வெறுக்கச் சொல்லுவது அவர்களை முற்றிலுமாக பகைத்துவிடவேண்டும் என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. இந்த வசனத்தை அநேகர் தவறாக புரிந்துகொள்ளுகின்றனர். வெறுப்பது என்பது ஆண்டவரிலும் அதிகமாக அவர்களை நேசிக்கக்கூடாது என்பதுவே. குடும்பத்தில் உள்ளவர்களை அதிகமாக நேசிக்கும் போது ஆண்டவருடைய கட்டளைகளை நாம் நிறைவேற்றுவது சிலவேளைகளில் கூடாது போய்விடும். எடுத்துக்காட்டாக சபையில் நீங்கள் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஞாயிற்றுகிழமை நீங்கள் சீக்கிரமே சபைகூடுகைக்கு செல்ல வேண்டும் அதற்காக ஆயத்தமாகிக்கொண்டு இருக்கிறீர்கள் அப்பொழுது உங்கள் மீது அதிமான பாசம் கொண்ட உங்களுடைய இளைய மகன் ஒரு பொருளைக் கேட்டு அடம்பிடிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்களுடைய நேரம் வீணாகும், நீங்கள் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற இடத்துக் குப்போவது தாமதமாகும், ஒருவேளை இதனால் போகமுடியாமல் கூட போய்விடும்.

"அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்" (மத்.8:21,22). இங்கே தன் தகப்பனை அடக்கம் பண்ணகேட்டுக்கொண்ட சீஷனைப்பார்த்து மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றி வா என்றார். இதனால் அவன் தன் தகப்பனை அடக்கம் பண்ணப்போகவேண்டாம் என்று அர்த்தமல்ல. மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும் நீ என்னைப் பின்பற்றி வா என்றார். ஆண்டவருடைய அழைப்பு எல்லாவற்றைக்காட்டிலும் மேலானது.

"அவர் அவ்விடம் விட்டுப்போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" (மத்.4:21-22). பிறந்ததுமுதல் தன் தாய்தகப்பனை விட்டுப் பிரியாதவர்கள் இயேசுவின் அழைப்பை கேட்டவுடன் இருவருமே தாங்கள் பழுதுபார்த்துக் கொண்டு வந்த மீன்பிடி படவையும், தங்களுடைய தகப்பனையும் விட்டு இயேசுவின் பின்னே சென்றார்கள். யாக்கோபு, யோவானுடைய தகப்பனாகிய செபதேயுவிற்கு எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். ஆனால் தன்னுடைய பிள்ளைகள் இயேசுவின் பின்னே செல்வதை செபதேயு தடுக்கவில்லை. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? ஆண்டவர் பின்னாலேதானே போகிறார்கள், நல்ல காரியங்களைக் கற்றுக்கொள்ளுவார்கள் என்ற மனநிறைவு அந்தப் பெற்றோருக்கு இருந்திருக்கும். இன்றைக்கு பிள்ளைகளை சபைக்கூட்டங்களுக்கு அனுப்பும் எத்தனை பெற்றோரைப் பார்க்கிறோம். கர்த்தருடைய காரியங்களுக்கு முதலிடம் கொடுங்கள் அப்பொழுது உங்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படும். இங்கே இயேசுவுக்கு சீஷர்களாயிருக்க யாக்கோபும் யோவானும் தகுதியுடையவர்களாக காணப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் கர்த்தர் சொன்னபடியாக குடும்பத்தை வெறுத்து அவர் பின்னே சென்றார்கள். தன் தகப்பனிடத்தில் கூட அவர்கள் அனுமதி கேட்டதாக சொல்லப்படவில்லை. அனுமதி கேட்டிருந்தால் என்னவாகும்? ஒருவேளை அவர்களுடைய தகப்பன் அனுமதித்திருக்கலாம் இல்லையென்றால் உன்னுடைய தாயை கேள் என்று சொல்லியிருக்கலாம் இல்லையென்றால் கொஞ்சம் வேலைகள் இருக்கிறது அதையெல்லாம் முடித்துவிட்டு பின்பு நீங்கள் இயேசுவின் பின்னே செல்லுங்கள் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்களாக ஒரு வார்த்தையும் சொல்லாமல் உடனே எல்லாவற்றையும் விட்டு இயேசுவின் பின்னே சென்றனர். இப்படிப்பட்ட தகுதி உங்களுக்கு இருக்கிறதா என்பதை வசனத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

**இரண்டாவது** "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:27). சிலுவை என்று சொல்லும்போது அது பாடுகளைக்குறிக்கிறதாக இருக்கிறது. சிலுவையைக் கழுத்தில் எடுத்து மாட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால் தனக்கு வரக்கூடிய பாடுகளை சகிக்கமுடியாமல் விசுவாசத்தை விட்டு விலகியும், அவரை அநேக சூழ்நிலைகளில் மறுதலித்தும் போகிறார்கள். ஒருவன் இயேசுவை பின்தொடரும்போது அவனுக்கு அநேக பாடுகள் உண்டு. இவைகளை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றவேண்டும் என்றே இயேசு சொல்லியிருக்கிறார். இயேசுவை பின்பற்றினால் பாடுகள் வராது, பிரச்சனைகள் வராது என்று சொல்லி யாரையும் அவர் ஏமாற்றவில்லை. பவுலும் கூட அவருக்கு இருக்கும் போராட்டத்தைப் பற்றி கொலோசெயருக்கு எழுதின கடிதத்தில் குறிப்பிடுவதை வாசிக்கிறோம். கொலோ.2:1-ம் வசனம் "உங்களுக்காகவும் லாவோதிக்கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன் என்கிறார்". அப்போஸ்தலர்களில் குறிப்பாக பவுலை கர்த்தர் அதிகமாக எடுத்து ஊழியத்திலே பயன்படுத்தினார். இவர்களால்



தீர்க்கதரிசி என்று குறிப்பிடப்பட்டவள் கர்த்தரால் தண்டிக்கப்படுகிறாள். ஏன்? அவளிடமிருந்த பெருமை அல்லது பொறாமை குணம் அவளுக்கு மிக மோசமான தண்டனையை வருவித்தது. "எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாவகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்.

கர்த்தர் அதைக் கேட்டார். …அப்பொழுது அவர் நான் அவனுடன் (மோசேயுடன்) மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்… மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப் போயிற்று, மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள்; …"(எண்.12:1-10). பார்த்தீர்களா, எப்பேர்பட்ட தண்டனை இது! கர்த்தராகிய தகப்பன் அவள் முகத்தில் காறித் துப்பினதற்குச் சமானமாகச் சொல்லப்படுகிறது (வச.14).

அன்றைய நாளில் மட்டுமல்ல, இன்றைய நாளிலும் கூட, இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்து, பாவங்கள் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவ ஸ்திரீயாக அல்லது கிறிஸ்துவின் ஊழியக்காரியாக இருக்கிற அநேகர் இப்படித்தான் இருக்கின்றனர். கர்த்தருடைய சமூகத்தில் பயத்தோடும் நடுக்கத்தோடும் இருப்போம். நம்மிடம் இப்பேர்பட்டதான பெருமையோ, பொறாமையோ, வேறெந்த மாம்சசிந்தையோ இருக்குமானால் அவைகளைக் களைந்து போடுவோம். மோசமான தண்டனைக்குள்ளாகாமல் நம்மைக் காத்துக்கொள்ளவோம். நான் துணிச்சலானவள், வைராக்கிய முள்ளவள், தீர்க்கதரிசன வசனங்களைப் பகிர்ந்துகொள்ளுகிறவள், ஞானஸ்நானம் பெற்றவள் கன்மலை கிறிஸ்துவினிடத்தில் வந்து சேர்ந்தவள் என்று அடுக்கிக்கொண்டே போய் கர்த்தரின் சித்தம் செய்யாமல் போவேமானால் பரிதபிக்கப்படத்தக்கவர்களாக மாறக்கூடும். எனவே பயத்தோடும் நடுக்கத்தோடும் கர்த்தரை மகிமைப்படுத்துவோம் மற்றவர்களை அற்மாக எண்ணாதிருப்போம். கர்த்தர் தாமே நம்மைக் காப்பாராக! ஆமென்.

- நமது மாதஇதழின் வாசகர்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லி...
- இவ்வருடத்தில் புதிதாக பிறந்தவர்களுக்காக...
- கொரோனா தொற்றிலிருந்து ஜனங்கள் காக்கப்பட....
- சபைகளுக்கு விரோதமாக செயல்படுகிறவர்கள் மனந்திரும்ப...
- இந்தியாவில் சுவிசேஷம் தடையில்லாமல் பிரசங்கிக்கப்பட....
- நமது வேதாகம பள்ளி ஊழியத்திற்காக...
- வேதாகம பயிற்சி முடித்து பட்டம் பெறுகிறவர்களுக்காக...



ஜெபியுங்கள்



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

அப்போது இவளுக்கு ஏழு வயது இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. சிறுவயதிலேயே துணிச்சல் மிக்கவளாய், தேவ திட்டம் நிறைவேற தெரிந்தோ தெரியாமலோ தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறாள். இவளுடைய சிறிய துணிச்சலான செயல் தன் சகோதரனை மட்டும் மல்ல பிற்காலத்தில் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலரின் விடுதலைக்கும் உதவியது. நாம் எப்படி செயல்படுகிறோம்? நம்முடைய சிறிய செயலாவது மற்றவர் பாவப்பிடியிலிருந்து விடுதலையடைய உதவுகிறதா? சிந்திப்போம்!

எபிரெய ஸ்திரீயான மிரியாம் 'கர்த்தரை தெய்வமாகக் கொண்ட' ஒரு வைராக்கியமுள்ள ஸ்திரீ என்று தான்கூறவேண்டும் ஏனென்றால் மோசேயைக் கொண்டு கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க சித்தம் கொண்டார். அந்தப்படியே நானூற்றுமுப்பது வருஷம் அடிமைகளாகயிருந்த இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்த கானானை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்களோடே கூட மரியாமும் புறப்பட்டாள். பார்வோனின் ராணுவம் இஸ்ரவேலரை பின் தொடர்ந்தது. ஆனால் கர்த்தர் இஸ்ரவேலரை சிவந்த சமுத்திரத்தைக் கடக்கும்படி செய்து பார்வோனின் இராணுவத்தை கடலில் மூழ்கடிக்கப்பண்ணி வெற்றிச்சிறந்தார். 'கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்" (யாத்.14:31). இவ்விதமாய்க் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்த கர்த்தரை மோசேயும், இஸ்ரவேல்புத்திரரும் புகழ்ந்து பாடினார்கள்.

ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் எனும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டு சகல ஸ்திரீகளுக்குப் பிரதி வசனமாக: கர்த்தரைப்பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடும்படி செய்தாள் (யாத்.15:20,21). இப்படியாக தீர்க்கதரிசியான மிரியாம் தான் மட்டுமல்லாது கர்த்தரைப் பாடி துதிக்கும்படி தன்னோடிருந்த சகல ஸ்திரீகளையும் கேட்டுக்கொண்டாள். பாவப்பிடியிலிருந்து இயேசுவின் இரத்தத்தினால் விடுவிக்கப்பட்ட நாம் அவருடைய இரட்சிப்பை நினைத்து கர்த்தரைப் புகழ்ந்து பாடி துதித்து மற்ற ஸ்திரீகளோடும் இந்த சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டு இருக்கிறோமா? சிந்திப்போம்!

மேலும் மிரியாமைக் குறித்து ஆராயும்போது, அன்றையநாட்களிலே இவள் கன்மலை கிறிஸ்துவின் தண்ணீரை குடித்தவள் என்றும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவள் என்றும் அறிந்துகொள்ளலாம். எப்படியெனில், 1கொரி.10:1-4 வசனங்களை வாசிக்கையில், "இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாம் ....மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்... ஞானக் கன்லையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்று எழுதப்பட்டுள்ளது. இப்படியாக ஞான அர்த்தமுள்ள ஆசீர்வாதங்களை பெற்றவள், துணிச்சல் மிக்கவள், வைராக்கியமுள்ளவள்,



சுகமாக்கப்பட்டவர்கள் அநேகராயிருந்தனர். ஆனால் இவர்களுக்கு பாடுகள் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்தது. "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்கிறார் (ரோ.8:38-39). அந்த அளவு இயேசுவின் மீது அன்புள்ளவராயிருந்தார். அவர்மீது வைத்துள்ள அன்பை எந்த ஒரு அதிகாரங்களானாலும் பிரிக்கமுடியாது என்பது பவுலுடைய ஆணித்தரமான நம்பிக்கையாக இருந்தது. உங்களுடைய அன்பும் நம்பிக்கையும் எத்தகையது? சின்ன சின்ன கஷ்டங்கள் வந்தவுடன் அநேகர் உங்களைப் பார்த்து கேட்கக்கூடும் உங்களுடைய ஆண்டவர் உங்களை கைவிட்டுவிட்டாரா? ஏன் இந்த கஷ்டங்கள் போராட்டங்கள் என்று கேட்கக்கூடும். நீங்கள் இப்படி கேட்கக்கூடியவர்ளுக்கு மத்தியில் சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக ஜீவிக்கவேண்டும். ஆகையால்தான் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்றார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அநேக பாடுகள் இருந்தது மரணபரியந்தமும் துன்பப்பட்டார். அநேகமுறை காவலிலும் மரண அடிகளிலும் அவதிப்பட்டார். இத்தனை பாடுகளையும் அநுபவித்து இன்று அநேகர் கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொள்ளும்படி அநேக நிருபங்களை எழுதியிருக்கிறார். நன்றாக இருக்கிற காலத்திலே நாம் சிலருக்கு கடிதங்கள்கூட எழுதமுடியவில்லை. ஆனால் பவுல் சிறைச்சாலையில் இருந்துகொண்டும் மற்றசகோதரர்களை எழுதச்சொல்லி, பாடுகளோடுகூட ஆவியானவருடைய உதவியோடு கடிதங்களை எழுதி அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறதை நாம் அறியமுடிகிறது. எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே இயேசுவை பாடுகளோடு பின்பற்றும் ஒரு சீஷனாயிரு. அப்பொழுது சீஷனுக்குரிய தகுதியை அவரால் பெற்றுக்கொள்ளுவாய்.

**மூன்றாவது,** "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:33). நாம் உலகத்தில் வாழ்கிறோம். உலகத்தில் உள்ளவைகள் நம்முடைய வாழ்க்கைக்கு தேவை, அவைகளையெல்லாம் வெறுத்துவிட்டால் நாம் எப்படி வாழ்வது என்று நினைக்கிறீர்கள். இந்த வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும் முன்பு 1யோவான் 2:15-ம் வசனத்தை படித்துவிட்டு பின்பு இதனுடைய விளக்கத்தை அறிவோம். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை". ஆம், உலகத்தில் நாம் இருக்கிறோம். ஆனால் உலகத்தில் உள்ளவைகளில் அன்புகூராதிருக்கவேண்டும். எனவே தான், என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்றார். நேசம் வேண்டும் இயேசுவுக்கு மேலாக எதையும் நாம் நேசித்துவிடக்கூடாது. அது நம்முடைய விசுவாசத்திற்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்துவிடும். உலகத்தில் உள்ளவைகள் என்று சொல்லும்போது குடும்பம், பொருட்கள், நிலங்கள் இன்னும் இதுபோன்றவைகள் அடங்கும். இவைகளை ஒருவன் நேசிக்கும்போது பிதாவின் அன்பை இழக்கிறான். இவைகளை நமக்கு கொடுத்த தேவனுக்கு அவன் முதலாவது

நன்றியுள்ளவானயிருக்கவேண்டும். இதையே பிதாவாகிய தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆபிரகாமை தேவன் அழைத்தபோது; "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார். அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரனூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக் கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில் அவனுக்குச் பிள்ளையில்லாதிருக்கும்போது உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்" (அப்.7:3-5). ஆபிரகாம் உலகத்தையும் உலகத்தில் உள்ளவைகளையும் நேசிக்காதவனாயிருந்தபடியால் அவைகளை அவன் விட்டு விட்டு கர்த்தர் தமக்கு காண்பித்த தேசத்திற்கு விசுவாசத்துடனே சென்றான். உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கட்டளையை அவன் பெற்றுக்கொள்ளாத காலத்திலும் அந்த கட்டளையின்படி நடந்து தன் தகப்பனை அடக்கம் பண்ணினான் என்று காண்கிறோம்.

தேவனுக்கு மேலாக ஆபிரகாம் தன் தகப்பனை நேசிக்கவில்லை. அப்படி அவர் நேசித்திருப்பாரேயானால், தகப்பனுடைய வழியில் ஒரு விக்கிரகாராதனைக்காரனாக இருந்திருப்பார். அவர் தேவனை நேசித்தபடியால் தகப்பனுடைய வழியை தெரிந்துகொள்ளாமல் கர்த்தர் காட்டிய வழியில் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் புறம்பே தள்ளிவிட்டு காணாத தேசத்திற்கு கடந்துவந்தார் எனக் காண்கிறோம். நீங்களும் உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்பு செலுத்தாமல் இயேசுவின் மீது அன்பு செலுத்துங்கள். அப்பொழுது அவருக்கு சீஷராயிருப்பீர்கள்.

**இயேசுவுக்கு சீஷர்களாயிருக்க தகுதியென்ன?**

"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" என்றார் (யோவா.8:31). இயேசுவுக்கு சீஷர்களாயிருப்பதற்கு ஒரே தகுதி அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கவேண்டும். அவருடைய உபதேசம் பாரமான ஒன்றல்ல. அவைகளின்படி ஒருவன் வாழமுடியும் என்பதற்கு ஆண்டவர் இயேசு நமக்கு முன் மாதிரியை முன்வைத்துச் சென்றுள்ளார். அந்த மாதிரியின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது நாம் இயேசுவுக்கு ஏற்ற சீஷர்களாயிருப்போம். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சீஷர்கள் இயேசுவின் போதனையின்படி வாழ்ந்தார்கள். அதைக்குறித்து ஜனங்களுக்குப் போதித்தார்கள். அந்தப்போதனையின்படியாக சபையை உருவாக்கினார்கள். இதைக்குறித்து அப்போஸ்தலநடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இன்றைக்கு நீங்கள் அந்தப்படியாக நடந்துகொள்ளுகிறீர்களா? அப்படி நிலைத்திருக்கும்போது மெய்யாகவே அவருடைய சீஷர்களாயிருப்பீர்கள். இல்லையென்றால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். உங்களுடைய விசுவாசத்தை இயேசுவின் உபதேசத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள். நீங்கள் உங்களுக்குத்தானே ஒரு உபதேசத்தை வளர்த்துக்கொண்டு செல்வீர்களானால், அது உங்களை கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரித்து விடும். ஆகையால் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி உங்களை மாற்றியமைத்துக்கொள்ளுங்கள்.



பெண்கள் பகுதி

# மிரியாம் - Miriam

-Glory Arjunan



பரிசுத்த வேதாகமத்தில் அநேக ஸ்திரீகளைக் குறித்து நாம் வாசித்திருக்கிறோம். கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டு அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு வந்த ஸ்திரீகள் எப்போதுமே நமக்கு நல்மாதிரிகளாகவே இருக்கின்றனர். இப்போதும் மிரியாம் என்ற ஒரு வைராக்கியமுள்ள எபிரெய ஸ்திரீயைக் குறித்து ஆராய்ந்து கற்றுக்கொள்ளுவோம்.

இவள் அம்ராம் யோகேபெத் என்பவர்களுடைய குமாரத்தி மற்றும் மோசே, ஆரோனுடைய சகோதரி. இஸ்ரவேல் புத்திரர் எகிப்தில் அடிமையாக இருந்தபோது எகிப்தியரால் கொடுமையாக நடத்தப்பட்டனர். அச்சமயத்தில் எபிரெய ஸ்திரீகளுக்குப் பிறந்த ஆண் பிள்ளைகளையெல்லாம் கொன்றுபோடும்படி மருத்துவச்சிகளுக்கு எகிப்தின் ராஜா உத்தரவிட்டிருந்தான். ஆனால் "மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளை களையும் உயிரோடே காப்பாற்றினார்கள்" (யாத்.1:17). இச்சூழலில் தான், இவளுடைய தம்பியாகிய மோசே பிறந்தான். மோசேயின் தாய் யோகேபெத் "...ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று; அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள். அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக் கூடாமல், ஒரு நாணற்பெட்டி எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோராமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை (மிரியாம்) தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்" (யாத்.2:1-4).

அப்பொழுது நதியில் ஸ்நானம் பண்ண வந்த பார்வோனின் குமாரத்தி, அந்தப் பெட்டியைக் கண்டு திறந்து பார்த்தபோது, பெட்டியில் பிள்ளையைக் கண்டாள்; பிள்ளை அழுதது அவளோ இது எபிரெய பிள்ளை என்று சொல்லி பிள்ளையின் மேல் இரக்கமுற்றாள் இதைக் கண்ட மோசேயின் தமக்கை மிரியாம் தருணத்தை நழுவவிடாமல் கொஞ்சமும் தயக்கமின்றி, பயப்படாமல் பார்வோனின் குமாரத்தியை நோக்கி, உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்க பால்கொடுக்கும் ஒரு எபிரெய ஸ்திரீயை அழைத்து வரட்டுமா என்றாள். ராஜ குமாரத்தி அழைத்து வா என்றதும் பிள்ளையின் தாயையே அழைத்துக் கொண்டு வந்தாள்" (யாத்.2:5-8). முதலாவது என்ன நடக்குமோ என்று தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தவள் ராஜகுமாரத்தியின் கிட்ட வந்து, அவளது அனுமதி பெற்று மோசேயின் தாயைக்கொண்டே அவனை வளர்க்கும்படி ஞானமாய் செயல்பட்டிருக்கிறாள். இங்கே மிரியாம் தனக்கோ, தன் குடும்பத்துக்கோ ஆபத்து வந்து விடுமே, என்றெல்லாம் பயப்படவில்லை. துணிச்சலாக பார்வோனின் குமாரத்தியிடமே பேசி, அரண்மனையிலே பத்திரமாக மோசே வளர வழி வகுத்துவிட்டாள். இது இவளது துணிச்சல் அல்லவா! அது மாத்திரமல்ல தேவனுடைய திட்டம் நிறைவேற பயன்படுத்தப்பட்ட அற்புதமான பாத்திரம் இவள்!

## விசுவாசமும் விசுவாச வீரர்களும்

பாடம்: 1

## Faith and Faith Knights - K.R.K.Ravi Asir

**விசுவாசம் என்பது என்ன?**

எபி. 11:1 **"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது"**

விசுவாசம் என்றால் நம்பிக்கையில் உறுதி இருக்க வேண்டும். விசுவாசத்தினாலே மோசே அதரிசனமானவரை தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து பார்வோன் ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப்போனான் (எபி. 11:27). இவ்வசனமானது மோசேக்கு தேவன் மேலிருந்த உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. ஆபிரகாமும் தேவன்தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு காத்திருந்தான் (எபி. 11:10). ஆபிரகாம் தேவனிடத்தில் உறுதியான நம்பிக்கை உடையவனாயிருந்தான் என்பதை நாம் இவ்வசனத்தில் காண்கிறோம். "நிலையான நகரம் நமக்கு இங்கு இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்" (எபி. 13:14). "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ. 3:1,2).


நம் நம்பிக்கை எப்பொழுதும் கர்த்தர்மேல் இருக்க வேண்டும் (நீதி. 22:19). துன்மார்க்கன் மரிக்கும்போது அவன் நம்பிக்கை அழியும்: அக்கிரமக்காரரின் அபேட்சை கெட்டுப்போம் (நீதி.11:7). நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது; அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலி. 3:20). அதன்பின்பு நாம் தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையிலே உறுதியாயிருக்க வேண்டும் (ரோமர் 5:2). உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் ஆபிரகாம் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி அவன் விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர்4:18,21). நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம் (எபி.7:19). நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையை பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். அந்த நம்பிக்கை நமக்கு நிலையும், உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமுமாயிருக்கிறது (எபி. 6:18,19). எனவே உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1 பேதுரு 3:15).



## பரிசுத்தமானவைகள்
## HOLY THINGS

-J.C.Choate

**நீ**ண்ட காலத்துக்கு முன்பு பவுல் "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று சொன்னார் (ரோமர் 12:1).



தயவு செய்து இவ்வசனத்தின் பிற்பகுதியை மிகவும் கவனமாக மனதிலே வைத்து சிந்தனை செய்யுங்கள். மிகவும் கவனமாக, தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய சரீரங்களை தேவனுக்கென்று பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதை கூர்ந்து கவனியுங்கள். மேலும், எழுத்தாளர் "இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்று கூறுகிறார். விசேஷமாக நீங்கள், "பரிசுத்தமான" என்ற சிறிய வார்த்தையை யோசித்துப் பாருங்கள். இந்த முழு வசனப் பகுதியும் பரிசுத்தத்திற்கே வேண்டி அழைக்கிறதாய் இருக்கிறது.

மற்றொரு அப்போஸ்தலரும் "நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" என்று எழுதியிருக்கிறதே என்று எழுதினார் (1 பேதுரு 1:14-16). இவ்விதமாக பேதுருவானவர் தம்முடைய காலத்தில் வாழ்ந்த ஜனங்களிடம் கர்த்தர் பரிசுத்தமானவர் என்பதை உணர்ந்து அவர்கள் தங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் என்று அழைக்கிறார். அதுவே எப்பொழுதும் அவருடைய வாஞ்சையாக இருந்திருக்கிறது. இந்த மாற்றத்தினால் எந்த அபாயமும் இருக்கிறதில்லை.

மேற்சொன்ன வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டியபடி மற்றவர்களும், "பரிசுத்தமான" என்ற வார்த்தையைக் குறித்து பேசியிருக்கக்கூடும். அது நன்மையானதாக இருக்கலாம். தொடர்ந்து இப்பாடத்தினுள் செல்வதற்கு முன் "பரிசுத்தமான" என்ற பதத்தை வரையறுக்கிறோம். பரிசுத்தமான என்ற வார்த்தை சுத்திகரிக்கப்படுதலை அல்லது பிரித்தெடுக்கப்படுதலை குறிப்பிடுகிறது; அது தேவனுக்கேற்றதாக சுத்தமானதாக இருக்கிறது. இதற்குத் தொடர்புடைய வகையிலே இந்த பரிசுத்தமான என்ற வார்த்தை ஒரு நல்ல வேதவாக்கியத்திற்குரிய பதமாக இருக்கிறது. இந்த சத்தியமானது அநேக ஜனங்கள் "பரிசுத்தமான" அல்லது "பரிசுத்தம்" என்ற வார்த்தையைக் குறிப்பிட்ட ஒரு மார்க்க சம்பந்தமான மக்கள் கூட்டம் சொல்வதற்கு பயப்படுகிறது. அவர்கள் தங்களையே "பரிசுத்தம்" என்று

அழைத்துக் கொள்கிறார்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட ஜனங்கள் வேதவாக்கியங்களுக்கு எதிரானவர்களாயிருந்து மற்ற வழிகளிலே பரிசுத்தத்தை வலியுறுத்துவதிலே தாங்கள் சரியாக இருப்பதாக சொல்லிக் கொள்கிறார்கள். குறிப்பு என்னவென்றால் நம்மில் தங்களை தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் மெய்யான கிறிஸ்துவின் சபையார் பரிசுத்தத்தின் அழகை முன்நிறுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையை குறித்து வெட்கப்படுகிறவர்களாயிருக்க வேண்டாம். கர்த்தர் சொல்லியிருக்கிறபடியே நாம் பரிசுத்தமானவர்களாயிருக்க வேண்டும். அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, அது என்னவென்றால், நாம் எப்பொழுதுமே பூரணப்படுதலை நோக்கி பிரயாசப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். பின் ஒருநாளிலே உண்மையுள்ளவர்கள் பூரணராக்கப்பட்டு என்றென்றுமாய் கர்த்தரோடே கூட ஜீவிப்பார்கள்.

பரிசுத்தமாயிருக்கிற இந்த காரியங்களை இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள்.

**1. தேவன் பரிசுத்தராயிருக்கிறார் (யோவான் 17:11)**

அவர் தொடக்கமும் முடிவும் இல்லாதவராக, பரலோகத்தில் ஆளுகை செய்கிறவராக, சகலத்தையும் சிருஷ்டித்தவராக இருக்கிறார். அவருடைய குமாரன் அவரை, "பரிசுத்த பிதா" என்று அழைக்கிறார்.

**2. கிறிஸ்து பரிசுத்தராயிருக்கிறார் (1 பேதுரு 1:15)**

இவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார், பரலோகத்தில் இருந்து வந்து, ஒரு பூரணமான பரிசுத்த ஜீவியத்தை ஜீவித்து, தன்னுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு பின்பு தன்னுடைய பிதாவினிடமாய் பரத்துக்கு ஏறிச்சென்று ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தராக ஆளுகை செய்கிறார்.

**3. ஆவியானவர் பரிசுத்தராயிருக்கிறார் (மத். 28:19)**

கிறிஸ்துவானவர் ஆவியானவரை அப்போஸ்தலர்களிடத்தில் அனுப்பினார்; அவர் தேவமனுஷர்களை வேதவாக்கியங்களை எழுதும்படி வழிநடத்தினார்; அவர் தேவனுக்கு கீழ்ப்படிகிற ஆத்துமாக்கள் அனைவருக்கும் அருளப்படுகிறார். அவர் பரிசுத்தமானவராய் இருக்கிறதாகவும் பேசப்படுகிறார்.

**4. சபை பரிசுத்தமானதாயிருக்கிறது (எபி. 3:1)**

கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார்; தம்முடைய இரத்தத்தினாலே விலைக்கிரயமாக வாங்கினார்; இவர் அதற்கு தலையாகவும், இரட்சகராகவும் இருக்கிறார்.

**5. சுவிசேஷம் பரிசுத்தமானதாயிருக்கிறது (ரோமர் 1:16)**

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவற்றை அடிப்படையாக கொண்டது; தொலைந்துபோன நிலையில் இருக்கிறவர்கள் சுவிசேஷத்தினால் அழைக்கப்படுகிறார்கள்; அது இரட்சிக்கும் வல்லமை கொண்டதாய் இருக்கிறது.



நாம் ஞானமுள்ளவர்களாயிருந்தால் ஒப்பிட்டுப்பார்க்க, போதனைகளைக் கற்க, ஜனங்களின் வாழ்வின் முடிவில் ஏற்படும் விளைவைக் காணவும்கூட அதிக விருப்பமுடையவர்களாயிருப்போம், ஏனென்றால் இவையெல்லாவற்றின் முடிவிலும் நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியும்.

கிறிஸ்தவத்துக்கும் மற்றெல்லா சமயங்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளில் முதன்மையானதும் அதிக பிரதானமானதுமான ஒரு வேறுபாடு என்ன? அது இதன் ஸ்தாபகர், இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு அவருடைய மரித்தசரீரம் அடக்கம்பண்ணப்பட்டதேயாகும். இது வரலாற்று உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, பல சாட்சியங்களின் விஷயம் தெரிந்தவர்களால் இதை மறுக்க முயற்சித்தும் கூட முடியாமல் போயிற்று அவருடைய சங்கதி அவர் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தவற்றை தொடர்ந்து போதித்த சீஷர்களோடு கூட அங்கு முடிந்திருக்குமானால், விந்தையான கொள்கைகளை விவரித்து, சீஷர்களின் குழுக்களை ஏற்படுத்தி தங்களுடைய சமயத்தை தங்களுடைய மரணத்திற்குப் பின் உலகத்திற்கு மரணசாசனமாக ஏற்படுத்துகிற மற்றவர்களோடு இவர் சமமாக கருதப்பட்டிருப்பார்

ஆனால் இச்சம்பவம் அவருடைய மரணத்தோடும், அடக்கத்தோடும் ஒரேயடியாக முடிந்து விடவில்லை. அவருடைய விரோதிகள் அவரை சிலுவையில் அறைந்த அதே நகரத்தில் அவருடைய சீஷர்கள் அவருடைய சரீரத்தை களவாடிக் கொண்டுபோக ஏதுவில்லாதபடி அவருடைய கல்லறையைச் சுற்றி காவல் வைத்தார்கள், அவருடைய சரீரம் கல்லறையிலிருந்து காணப்படாமற்போயிற்று! வேதாகமத்தில் கூறப்பட்டது போல அவர் உண்மையாகவே உயிர்தெழுந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதற்கு இரண்டு சாட்சியங்கள் உண்டு.

(1) அவருடைய விரோதிகள் அவருடைய மரித்த சரீரத்திற்கு உரிமை பாராட்டிக்கொண்டிருந்தாலும் கூட காவலாளிகள் கல்லறை வெறுமையாக இருக்க கண்ட பிறகு, அவர்கள் ஒருபோதும் அந்த சரீரத்தைக் கொண்டு வரவில்லை. அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்திருக்கவில்லையென்றால் அவர் உயிர்த்தெழுந்தார் என்று தெரிவிக்கிறவர்களின் வாய்களை மிக எளிதாக அடைத்திருந்திருக்கக் கூடும்! ஆனால் அவர்கள் அதைச்செய்யவில்லை – ஏனென்றால் அவர்களால் அது முடியவில்லை!

(2) இயேசுவின் மரணத்தின் போது, அவருடைய சீஷர்கள் தங்களுடைய சொந்த ஜீவனை காக்க, பயத்தினால் அவரை மறுதலித்துவிட்டார்கள். அவருடைய உயிர்தெழுதலுக்குப் பிறகு, அவர் அவர்களுக்கு இருமுறை காட்சியளித்து உலகமெங்கும் சென்று இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இதை அவர்கள் செய்து, மிகுந்த உபத்திரவத்தினால் மரணத்திற்குள்ளானார்கள். தங்கள் திடநம்பிக்கையில் இந்த தத்ரூபமான மாற்றம், உண்மையாகவே தங்களுடைய உயிர்தெழுந்த இரட்சகர் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டது உண்மை என்பதற்கு ஒரு பலத்த சாட்சியாயிருக்கிறது.

வேறு எந்த ஒரு சமய ஸ்தாபகரும் மரணத்தை ஜெயிக்கவில்லை. இதுவே கிறிஸ்தவத்திற்கும் மற்றவற்றிற்குமுள்ள அடிப்படையான வித்தியாசம். "...இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள்சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:11) என நாம் வாக்களிக்கப்பட்டுள்ளோம்.

பெண்கள் பகுதி



நான் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறேன் என்பது குறித்து கவலையில்லை

It`s Doesn`t Matter Which Religion I Follow

*-Betty*

உலகில் பல சமயங்களும், பல புனித நூல்களும் பல மத குருக்களும் உண்டு. இந்த பல்வேறு சமயங்களின் ஸ்தாபகர்கள் 'புனிதர்கள்' என தங்கள் சீடர்களால் கருதப்படுகின்றனர். அநேக ஜனங்கள் வழக்கம்போல தங்களுடைய பெற்றோர்களின் சமயத்தைப் பின்பற்றுவதில் நிலைத்திருந்தாலும், உண்மையில் எல்லா சமயங்களும் ஒன்று என்றும், முடிவில் விளைவானது, எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்குமென்றும் நினைக்கின்றனர். அவர்கள் ''எல்லா சமயங்களும் நல்லவனாயிரு, நல்லதைச் செய்'' எனப் போதிக்கிறது. இதுவே போதுமானது நீங்கள் முகமதுவையோ அல்லது கிருஷ்ணனையோ அல்லது இயேசுவையோ பின்பற்றினால் பரவாயில்லை எல்லாமே ஒன்றுதான்! என விவேகத்துடன் விளக்குகின்றனர்.

ஆனால் இது ஒன்றானதா? பல்வேறு சமய சீடர்களை பின்வரும் இவைகளின் மூலம் வேறுபடுத்த உங்களால் முடியுமா?

- அவர்களின் ஆடை அணியும் விதத்தை உற்றுநோக்கல்?
- அவர்களுடைய சொற்பொழிவுக்குக் கவனம் செலுத்துதல்?
- அவர்கள் மற்றவர்களை நடத்தும் விதத்தை உற்று நோக்கல்?
- அவர்களுடைய நடத்தை மற்றும் கௌரவத்தை பகுத்துப் பார்த்தல்?
- அவர்களுடைய வாழ்வில் எது முக்கியமானது என்பதை பார்த்தல்?
- அவர்கள் குடும்ப அங்கத்தினரோடு எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பதை கவனித்தல்?
- அவர்கள் எங்கு, மற்றும் எவ்வாறு ஆராதிக்கிறார்கள் என்பதை உற்றுப் பார்த்தல்?
- அவர்கள் தேவனிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என அறிந்து கொள்ளுதல்?
- அவர்களுடைய வாழ்க்கை தத்துவம், மரணம், மற்றும் பிற்கால வாழ்வு போன்றவற்றை கேள்விப்படுதல்?
- அவர்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் பாவத்தை சமாளிக்கிறார்கள் எனக் கற்றறிதல்?
- அவர்களுடைய குரு மற்றும் புனிதநூலின் போதனையை படித்தல்?

நிச்சயமாக, ஒவ்வொரு சமயத்தினை ஒப்பிட்டுப்பார்ப்பதில் நாம் இப்பட்டியலை தொடரலாம், மேலும் நாம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை போதனைகளும் பழக்கவழக்கங்களும் அனுதின வாழ்வில் ஒரு முழுமையான வித்தியாசத்தை ஏற்படுத்துவதோடுகூட நித்திய எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறதைக் காணலாம்.

நாம் ஏதோ சில சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நமது முற்பிதாக்களின் சமயத்தை பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கூட்டத்தாருடைய சமயத்தைப்பின்பற்றுவது என்பது போதுமானதல்ல. தனித்தனியே, ஒவ்வொரு மனிதனும் ஒரு அழிவில்லாத ஆத்துமாவாகும், மேலும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வில் நாம் தெரிந்தெடுக்கும் சமயத்திற்காக நித்தியத்தில் பதிலளிக்க வேண்டியவர்களாக இருப்போம். நாம் உணர்ச்சியற்றவர்களாய், அக்கறையுடனிருக்க விரும்பாதவர்களாய் இருந்தால், நாம் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறோம் என்பது பற்றி கவலையில்லை என்ற தீர்மானத்திற்கு வரலாம்.



**6. கிறிஸ்துவின் இரத்தம் பரிசுத்தமானதாயிருக்கிறது (1 பேதுரு 1:18,19)**

கிறிஸ்துவின் இரத்தம்; இது மீட்பையும், பாவமன்னிப்பையும் அளிக்கிறது; இது மன்னிக்கிறது அல்லது பாவங்களற கழுவுகிறது.

**7. அவருடைய நாமம் பரிசுத்தமானது (அப்போஸ்தலர் 4:12)**

கிறிஸ்துவின் நாமம்; கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், மொத்தமாகவும் அதைத் தரித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அதிலே இரட்சிப்பு இருக்கிறது.

**8. வார்த்தை பரிசுத்தமாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16,17)**

தேவனுடைய வார்த்தை, இவைகள் அனைத்தும் தேவனால் ஏவப்பட்டதாயிருக்கிறது. அது இரட்சிக்கும் வல்லமை கொண்டதாயிருக்கிறது.

**9. பரலோகம் பரிசுத்தமானதாயிருக்கிறது**

தேவனும், கிறிஸ்துவும் அங்கே வாசம்பண்ணுகிறார்கள். நீதிமான்கள் மட்டுமே அதை சுதந்தரித்துக் கொள்வார்கள். அது என்றென்றுமாய் நிலைத்திருக்கும்.

இவைகள் அனைத்துமே பரிசுத்தமானவைகளாய் இருக்கிறபடியால், நாம் ஒரு சில கேள்விகளைக் கேட்போமாக. இந்த உலகத்தில் பாவியான ஒருவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக ஜீவிக்காவிட்டால் அவன் இரட்சிக்கப்படுவதைக் குறித்து எவ்வாறு சிந்திக்க முடியும்? பூமியில் தவறிப்போகிற ஒரு கிறிஸ்தவன், அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே மரிப்பானேயாகில், அவன் ஒரு நிமிடம் இரட்சிக்கப்பட முடியும் என்று எவ்வாறு சிந்திக்க முடியும்? கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்கென்று பரிசுத்தமாக ஜீவிக்காத வரையில் நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று எவ்வாறு எண்ண முடியும்? கருத்து என்னவென்றால் குறிப்பிடப்பட்டிருக்கிறவைகள் பரிசுத்தமானவைகள் என்றால் நாம் அவைகளோடு (அவர்களோடு) ஐக்கியமாக இருக்கும்படி பரிசுத்தமானவர்களாயிருக்க வேண்டியதாயிருக்கிறது. தேவனுடையவைகள் அனைத்தும் பரிசுத்தமானவைகளாக இருக்கிறபடியால் அவைகளோடு (அவர்களோடு) ஐக்கியமாயிருக்கும்படி, நாம் பரிசுத்தமானவர்களாய் இருக்க வேண்டியதாயிருக்கிறது. நாம் "பரிசுத்தமானவர்களாயிருக்கும்படி பிரயாசம் எடுத்துக்கொள்ள" கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக!.

**நான் யார்? – Who Am I?**



- எங்களுடைய ஜென்ப பூமி ஊர்
- என் தகப்பன் பெயர் ஆரான்
- நான் ஒரு செழிப்பான் வெளியைத் தெரிந்துகொண்டேன்
- எனக்கு இரண்டு குமாரத்திகள்
- மனுஷகுமாரன் வரும் நாட்களில் என் நாட்களில் நடந்ததுபோல நடக்கும் என்றார்
- அக்கிரமக்காரருக்குள் தேவன் என்னை இரட்சித்தார்
- என் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள்

## வேதாகம கேள்விகள்

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



*தற்சோதனை பகுதி - 42*

**42. நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியுமா?**

1. நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே ☐ வசன ஆதாரம் ---------
2. அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானமாக இல்லை ☐ வசன ஆதாரம்---------------------------------------------------------------
3. என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதை எனக்குத் தெரிவியும் என்றார் தாவீது ☐ வசன ஆதாரம்------------------------------------------
4. என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடவில்லை என்றார் யோபு ☐ வசன ஆதாரம் -----------------------------------
5. ஆண்டவருக்குச் சித்தமானால் என்று சொல்லவேண்டும் ☐ வசன ஆதாரம்---------------------------------------------------------------
6. பவுல் எபேசுவை விட்டுப்புறப்படும்போது தேவனுக்குச் சித்தமானால் உங்களிடத்தில் வருவேனென்று சொல்லவில்லை ☐ வசன ஆதாரம்-
7. நாளைக்காக கவலைப்படாதிருங்கள் ☐ வசன ஆதாரம்-----------------
8. மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காக அவன் மனதுக்கோ திருப்தி ☐ வசன ஆதாரம்-----------------------------------------
9. முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது ☐ வசன ஆதாரம்-----------------------------------
10. சூரியனுக்குக் கீழே சம்பவிக்குங்காரியம் இன்னதென்று மனுஷனுக்கு அறிவிப்பவர்கள் இருக்கிறார்கள் ☐ வசன ஆதாரம்------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




**6. பொறுமையுள்ளவன்:**

ஒரு மூப்பர் சாந்தமும், பொறுமையும் உள்ளவராக இருக்கிறார். அவர் பகுத்து பார்க்கிறவராகவும், தயவுள்ளவராகவும் இருக்கிறார். அவர் கோபப்படாமல் பூமியிலே விலையேறப்பெற்ற உடைமைகளுக்காக பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவராக இருக்கிறார் (மத்.16:26).அவருடைய பொறுப்பு பெரிதானதாக இருக்கிறது. ஆகையால் ஒரு மூப்பராக இருக்க வேண்டுமேயாகில் கனம் பொருந்திய பொறுப்புகளின் கீழாக எவ்வாறு உண்மையுள்ளவராக இருப்பது என்பதை அந்த மனுஷன் அவசியம் அறிந்திருக்க வேண்டும். அவர் மற்றவர்களுக்குரிய விலையேறப் பெற்ற உடைமைகளை குறித்து நம்பிக்கைக்கு பாத்திரமானவராக இருக்க வேண்டும். அவர் தன்னுடைய கணக்கொப்புவிக்கும் நிலையை அவசியம் பலமாக உணர்ந்திருக்க வேண்டும். ஒரு மூப்பராக இருக்கிறவர் அநுபவம் வாய்ந்த தேவனுடைய ஒரு உண்மையுள்ள உக்கிராணக்காரனாக இருப்பது மிகவும் அவசியம்.

**கேள்விகள்**

1. சண்டை பண்ணாத ஒருவன் என்றால் என்ன?
2. சச்சரவை உண்டுபண்ணக்கூடிய ஒரு மனுஷன் எதை விரும்புகிறான்? ______________________
3. மற்ற எவர் ஒருவரைப் பார்க்கிலும், ஒரு மனுஷனுடைய குணாதிசயங்களை யார் நன்கு அறிந்தவர்களாயிருக்கிறார்கள்?
4. _ _ _ _ _ _ தன் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாயிருந்தான்.
5. விசுவாசமுள்ள பிள்ளைகளைக் குறித்த 3 வேத வாக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
6. ஒரு நூதன சீஷன் என்பவன் ______________________
7. எந்த பாவம் ஒரு நூதன சீஷனுக்கு அபாயத்தை உண்டாக்குகிறது? ______________
8. "புறம்பானவர்கள்" என்பது யார்?
9. ஒரு உக்கிராணக்காரன் என்றால் என்ன?
10. விலையேறப்பெற்ற உடைமை என்பது என்ன?

### தெரிந்து கொள்ளுவோம்

- புலியின் முன்னங்கால்களில் 5 விரல்களும், பின்னங்கால்களில் 4 விரல்களும் இருக்கும்.
- கள்ள ரூபாய் நோட்டுக்களை கண்டறிய X கதிர் பயன்படுகிறது.
- சென்னையில் வெளியான முதல் பத்திரிகை மெட்ராஸ் கூரியர்

*- K.R.K.Ravi Asir*

#### 4. அடிக்கிறவனாய் இராதவன்:

ஒரு மூப்பரானவன் மற்றவர்களை அடிக்கிற ஒருவராக இருக்கக்கூடாது. அவர் அடிக்கிறவராக இல்லாமல் மற்றவர்களிடத்தில் செல்வாக்கு ஏற்படுத்திக் கொள்கிறவராக இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவர் எப்பொழுதுமே எவர் ஒருவரையும் அடிக்கிறவராக இருக்கக்கூடாது. இயேசுவானவர் ஒரு சவுக்கினால் ஆடு, மாடுகளை தேவாலயத்துக்கு புறம்பே துரத்தினார் (யோவான் 2:15). பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் சிட்சைக்காக பிரம்பைக் கையாட வேண்டும். (நீதி.13:24). ஆனால் மூப்பர்களோ ஒரு பிரம்பு அல்லது சவுக்குக்கு பதிலாக பயன்படுத்துகிறார்கள். பூமிக்குரிய தண்டனை அரசாங்கங்களினால் பயன்படுத்தப்படுகிறது (ரோமர் 13:3,4) ஆனால் கிறிஸ்துவின் ராஜ்யம் பட்டயத்தைக் கொண்டு ஆளுகை செய்யப்படுகிறதில்லை. (மத்.26:51,52) தேவனுடைய வார்த்தையானது பூமிக்குரிய எந்த பட்டயத்தை பார்க்கிலும் மிகுந்த வல்லமை நிறைந்ததாக இருக்கிறது (எபி.4:12). நம்மை அடிக்கிற சத்துரு ஒருவரை மேற்கொள்வதற்கு கொடுமை செய்வதைப் பார்க்கிலும் நாம் மற்றொரு கன்னத்தை காட்டுவது மிகச்சிறந்த காரியமாக இருக்கிறது (மத்.5:39) அடிக்கிறவர்களாய் இருப்பதற்கு தாங்கள் மறுப்பு தெரிவிக்கிறதினாலே மூப்பர்கள் மற்ற கிறிஸ்தவர்களுக்கு முன்மாதிரிகளாக இருக்கிறார்கள்.

#### 5. இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்:

ஒரு மூப்பர் பேராசை கொண்டவராக இருக்கிறதில்லை இழிவான ஆதாயம் என்பது பணம் அல்லது உலகத்துக்குரிய ஆதாயமாக இருக்கிறது. ஒரு பொருளாசையுள்ள மனுஷன் தான் கொண்டிருக்கிற திரளான ஆஸ்தியில் தான் தன் ஜீவன் அடங்கியிருக்கிறது என்று எண்ணுகிறான் (லூக்.12:15). தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறவன் தேவனிடத்தில் ஐசுரியவானாயிருக்கிறதில்லை (லூக்.12:21). இயேசு நாம் தேவனுக்கும், பணத்துக்கும் ஊழியஞ்செய்ய முடியாது என்று சொன்னார் (மத்.6:24). பொருளாசையுள்ள மனுஷர் விக்கிரகாராதனைக்காரராக இருக்கிறார்கள் (கொலோ.3:5). அவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் (1கொரி.6:9,10) அவர்கள் சபையிலிருந்து விலக்கப்பட வேண்டும். (1கொரி.5:11).

கிறிஸ்தவர்கள் ஐசுவரியவான்களாக இருக்கும்படி நாடுகிறதில்லை. அவர்களுடைய தேவபக்தியே மிகுந்த ஆதாயமாக இருக்கிறது. உண்ணவும், உடுக்கவும் இருப்பது அவர்களுக்கு போதுமானதாயிருக்கிறது. அவர்கள் சோதனையில் இருந்தும், மனுஷரை அழிவில் அமிழ்த்துகிற ஐசுவரியமாகிய கண்ணியில் இருந்தும் தங்களை காத்துக் கொள்கிறார்கள். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது: சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் (1தீமோ.6:6-10) ஒரு கிறிஸ்தவனுடைய பலன் பரலோகத்திலே இருக்கிறது (மத்.5:12) பணஆசை கொண்டு வருகிற சுயநலத்தையும், பேராசையையும் அவன் தவிர்த்து விடுகிறான்; மூப்பராயிருக்கிறவர்கள் பண ஆசைக்கும் உலகத்தின் காரியங்களுக்கும் நீங்கலான மனுஷராயிருக்கும்படி ஒருபலம் வாய்ந்த முன் மாதிரியாக இருக்க வேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சியதாவர்களாக இருக்கிறார்கள்.



## வேத அறிவுப்போட்டி 256–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. நேபுகாத்நேச்சார் | - தானி.2:45 |
| 2. அறுப்புண்டது | - வெளி.14:16 |
| 3. அவருடைய நாமசங்கீர்த்தனம் | - ஓசி.12:5 |
| 4. விழித்திருக்கவேண்டும் | - மத்.25:13 |
| 5. யோவேல் | - யோவே.2:27 |
| 6. தேவனுடைய | - மாற்.16:19 |
| 7. பட்டயத்தினால் | - ஆமோ.9:10 |
| 8. பரிசேயன் | - லூக்.11:38 |
| 9. யோனா | - யோனா 4:4 |
| 10. இயேசுகிறிஸ்து | - யோவா.8:16 |

### சரியான பதில் எழுதியவர்கள்


| | |
|---|---|
| 1. Mrs. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 2. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 3. Sis. விஜய காந்தி | - கூத்தம்பாக்கம் |
| 4. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 5. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 6. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 7. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 8. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 9. Mrs. ஜெயமேரித்தாய் | - திண்டுக்கல் |
| 10. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 11. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 12. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 13. E. அதிசயம் | - பனைகுடி |
| 14. P. பிச்சை | - விருதுநகர் |
| 15. S. செல்வராஜ்சாலமோன் | - வள்ளியூர் |
| 16. R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 17. Mrs. ஜெனிதர்மராஜன் | - திருநெல்வேலி |
| 18. Mrs. பாலின்மார்ட்டின் | - கரைக்குடி |
| 19. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 20. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 21. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 22. Mrs. ஃபிராங்களினா ஜான் | - ஊட்டி |
| 23. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 24. J. பிச்சை | - விருதுநகர் |
| 25. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 26. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 27. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 28. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 29. Mrs. ஜேபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 30. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 31. T. ராஜாத்தி | - கோம்பை |
| 32. S. ஜாய்சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 33. S. ஓசியாஹரிராகவன் | - திருவள்ளூர் |
| 34. R. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 35. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 36. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 37. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 38. Mrs. பாலின்டேனியல் | - கீழ்ப்பாக்கம் |
| 39. S. அசோக்குமார்பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 40. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 41. Sis. ஜெயாபாணிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 42. Mrs. ருக்மணிஜெயசீலன் | - பன்னைப்புரம் |
| 43.T. ஏஞ்சலின்நேசமலர்கிலாடிஸ் | - சாந்தாபுரம் |
| 44. J. ஜான்சி | - ஆனைமலை |
| 45. B. ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 46. Sis. லீலாஜோசப் | - கோவை |
| 47. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 48. C. அருள்ராஜ் | - சென்னை |
| 49. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |

## வேத அறிவுப்போட்டி 257–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. பனியைப்போல | - மீகா 5:7 |
| 2. நிறைவேற்றினார்கள் | - அப்.13:27 |
| 3. சமமாயிருக்கிறார்கள் | - நாகூ.3:17 |
| 4. பவுல் | - ரோம.7:17 |
| 5. ஆபகூக் | - ஆபகூ.3:19 |
| 6. பக்திவிருத்தியை | - 1கொரி.10:23 |
| 7. மனங்கசந்து | - செப்.1:14 |
| 8. ஆம் | - 2கொரி.9:9 |
| 9. ஒன்றாயிருக்கும் | - சகரி.13:9 |
| 10. சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் | - கலா.1:8 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம்திரவியம் | - மதுரை |
| 2. S. ஓசியாஹரிராகவன் | - திருவள்ளூர் |
| 3. Mrs. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 4. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 5. Sis. விஜய காந்தி | - கூத்தம்பாக்கம் |
| 6. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 7. Mrs. பாலின்டேனியல் | - கீழ்ப்பாக்கம் |
| 8. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 9. R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 10. E. அதிசயம் | - பனைகுடி |
| 11. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 12. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 13. J. ஆலிவ் | - கோவை |
| 14. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 15. Mrs. ஜெனிதர்மராஜன் | - திருநெல்வேலி |
| 16. Mrs. இளவரசிஜோபிதா | - கோவை |
| 17. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 18. P. சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 19. Mrs. பாலின்மார்டின் | - காரைக்குடி |
| 20. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 21. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 22. S. சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 23. Mrs. ரூக்மணிஜெயசீலன் | - பன்னைப்புரம் |
| 24. T. ராஜாத்தி | - கோம்பை |
| 25. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 26. D. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 27. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 28. S. தங்கப்புஸ்பம் | - நாசரேத் |
| 29. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 30. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 31. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 32. Mrs. ஃபிராங்களினா ஜான் | - ஊட்டி |
| 33. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 34. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 35. S. அசோக்குமார்பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 36. R. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 37. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 38. B. ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 39. T. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 40. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 41. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 42. R. பாரதி | - கோபி |
| 43. Mrs. லீலாஜோசப் | - கோவை |
| 44. J. பிச்சை | - விருதுநகர் |
| 45. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 46. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 47. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 48. E. ஜாய்ஸ்ஹலன்புனிதா | - மேற்குதாம்பரம் |
| 49. Mrs. ஜான்சி | - ஆனைமலை |
| 50. Mrs. ஜெபாமோசஸ் | - வி.கே.புரம் |
| 51. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |




**வேதவாக்கியங்களின்படி**
**கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு**

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ர.வி.ஆசீர்*

பாடம் - 23

## மூப்பர்களுக்கான தகுதிகள் (II)

**வரைகுறிப்பு**

1. அந்நியரை உபசரிக்கிறவன்
2. போதக சமர்த்தன்
3. மதுபானம் பண்ணாதவன்
4. அடிக்கிறவனாய் இராதவன்
5. இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்
6. பொறுமையுள்ளவன்

### கலந்துரையாடல்

**1. அந்நியரை உபசரிக்கிறவன்:**

மூப்பருக்கான தகுதிகள் என்ற தலைப்பில் அதிகமாக படிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு குறிப்பும் தெளிவாக உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். இந்த குணாதிசயங்கள் மெய்யாகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொண்டிருக்க வேண்டிய விசேஷமான குணங்களாக இருக்கின்றன. விவாகமானவர் என்பதற்கு தொடர்புடைய காரியத்தில் ஒருசிலர் மட்டுமே ஒவ்வொரு முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனுக்குரிய குணாதிசயங்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவரும் பெரும்பாலான தகுதிகளை உடையவராய் இருப்பதற்கு அவசியம் பிரயாசப்பட வேண்டும். இவைகளில் ஒன்றுதான் அந்நியரை உபசரிப்பது ஒரு மூப்பர் அந்நியரை உபசரிக்க விருப்பம் உள்ளவராயிருக்க வேண்டும் என்று தீத்து 1:8 உரைக்கிறது. தேவையோடு இருக்கிறவர்களை ஒருவர் தன்னுடைய வீட்டிற்குள் வரவேற்பதை இது குறிப்பிடுகிறது. ஒருவருடைய உணவையும், உறைவிடத்தையும் பகிர்ந்து கொள்வதினாலே ஒரு கிறிஸ்தவனுக்குரிய தயவை வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது. சகல மனுஷரும் உபசரிக்கப்பட வேண்டும், ஆனால் விசேஷமாக உடன் இருக்கும் கிறிஸ்தவர்கள் உபசரிக்கப்பட வேண்டும் (கலா.6:10-11).

"பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" என்று ரோமர் 12:13 கூறுகிறது. எபிரெயர் 13:2 உரைக்கிறது "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" என்று ஆபிரகாம் அந்நியரை உபசரித்தபோது மெய்யாகவே அவர்கள் தேவதூதராயிருந்தார்கள் என்பதை இவ்வசனம் குறிப்பிட்டு காட்டுகிறது (ஆதி.18:1-8) 1யோவான் 3:17 "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்ச லுண் டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்கு ள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" என்று போதிக்கிறது. 1பேதுரு4:9, "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" என்று ஒரு மூப்பரானவர் உபசரிக்கும் தன்மை உடையவராக இருப்பது மிக அவசியம் என்று சொல்லுகிறது.



**2. போதக சமர்த்தன்;**

"சமர்த்தனாய் இருப்பது என்ற வார்த்தை" தகுதியும் விருப்பமும் உடையவராயிருப்பதை குறிப்பிடுகிறது. ஒரு மூப்பர் ஒரு சிறந்த தகுதியுடைய வேதாகம போதகராக இருக்க வேண்டியது அவசியம். கவனமாகக் கற்றுக் கொள்வது, ஜாக்கிரதையுடனே ஆயத்தமாக இருத்தல் மற்றும் போதிப்பதில் அதிகமான அனுபவம் ஆகியவற்றிலிருந்து இது வருகிறது. ஒரு ஊழியக்காரன் போதக சமர்த்தனாயும் இருக்க வேண்டியது அவசியம் (2தீமோ.2:24). கிறிஸ்தவம் போதிக்கப்பட்ட ஒரு மார்க்கமாக இருக்கிறது இயேசு, சகல ஜாதிகளுக்கும் போதித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து பின்பு அவர்களுக்கு மீண்டும் போதியுங்கள் என்று (மத்.28:19,20). இயேசு சொன்னார் பிதாவானவர் கேட்டுக் கற்றுக்கொள்வதன் மூலமாய் ஜனங்களை கிறிஸ்துவினிடம் இழுத்துக் கொள்கிறார் என்றார் (யோவான் 6:44,45) பவுல் தீமோத்தேயுவுக்கு அவர் கற்றுக் கொண்ட காரியங்களை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும் என்று சொன்னார் (2தீமோ.2:1).

ஆதி சபையார் இடைவிடாமல் இயேசுகிறிஸ்துவை போதித்தும் பிரசங்கித்தும் வந்தார்கள் (அப்.5:42) எபிரெய கிறிஸ்தவர்கள் போதகர்களாய் இருந்திருக்க வேண்டும், அவர்களுக்கு யாரோ ஒருவர் தேவனுடைய வார்த்தையின் மூல உபதேசங்களைப் போதிக்க வேண்டியதாயிருந்தது (எபி.5:12) இந்த வேதவாக்கியங்கள் சபையிலே இருக்க வேண்டிய சிறந்த உபதேசம் மற்றும் சிறந்த போதகர்களின் பெரிதான முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு மூப்பர் தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு முன்பாக சிறப்பாகவும், திறமையாகவும் போதிக்கிறவராக அவசியம் இருக்க வேண்டும். அவர் மந்தையை போஷிக்கிறவராக இருக்க வேண்டும் (அப்.20:28). அவர் பலமான போதகத்தினாலே சபையிலே பிழை, மற்றும் பாவத்தை மேற்கொள்ள வேண்டியது தேவையானதாக இருக்கிறது. அவர் போதக சமர்த்தனாக இருக்க வேண்டியது அவசியம்.

**3. மதுபானம் பண்ணாதவன்:**

இது குறிப்பிடுகிறது என்னவென்றால், நிச்சயமாக மதுபானத்தினால் வெறிகொள்ளும் பழக்கம் அற்றவராக இருக்க வேண்டும் அல்லது மதுபான மயக்கத்திற்கு வழி நடத்தும் எந்தவொரு பழக்கமும் அற்றவராக இருக்க வேண்டும். பவுல், தான் எந்த ஒன்றுக்கும் அடிமைப்படுத்தப்பட மாட்டேன் என்றும் (1கொரி.6:12), வெறியர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்றும் அவர் சொன்னார் (1கொரி.6:10). மதுபானப்பிரியர்கள் தரித்திரம், பரிதாபம், துக்கம், சண்டைகள், புலம்பல், காரணமில்லாத காயங்கள், இரத்தங்கலங்கின கண்கள் இவைகளை உடையவர்களாயிருக்கிறார்கள் (நீதி.23:21, 29-35) மதுபானம் பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். திராட்ச ரசமானது சரியான முறையில் கர்த்தருடைய பந்தியிலே பயன்படுத்தப்படலாம். (மத்.26:29). அது மருந்துக்காகவும் பயன்படுத்தப்படலாம் (1தீமோ.5:23) ஆனால் ஒருவர் வெறிகொள்ளும்படி செய்கிற திராட்சரசத்தை பானம் பண்ணுவது என்பது பாவம் நிறைந்த காரியமாக இருக்கிறது. மூப்பர்கள் தங்களை மதுபானத்திற்கு ஒப்புக்கொடாமல் இருந்து ஒரு சிறந்த முன் மாதிரியை வெளிப்படுத்த வேண்டியது அவசியம் ஆனதாயிருக்கிறது.